சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 171/2020

**PW 1 சிவக்குமார்** **19.09.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து நடந்த சமயத்தில் நான் TVS XL Super TN 41 AK 7018 என்ற இருசக்கர வாகனத்தில் போய் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து என்னுடைய வாகனத்தை தெற்கே திருப்பும் போது விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். விபத்தை பொருத்த காவல் துறை வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தான் வலது புறம் ஏறிச் சென்றதன் காரணமாக விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் 1ம் எதிர்மனுதாரர் தான் தவறாக வந்து என் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது. நான் விபத்து சமயத்தில் பூசாரிப்பட்டியில் இருந்து நல்லாம்பள்ளிக்கு வந்து தெற்கே பால் பண்ணைக்கு சற்று மேல்புறமாக திருப்பும் போது விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்தது வளைவு பகுதி என்று சொன்னால் சரிதான். வரைபடத்தை தாக்கல் செய்திருந்தால் விபத்திற்கு நான் தான் காரணம் என்று தெரிய வந்திருக்கும் என்றும், அதனால் தான் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்றால் இல்லை. வாகனத்தின் உரிமையாளர் எனது தகப்பனார் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான், விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தா என்றால் இருந்தது. எனது ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல.

விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர தேவையில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்றால் சரியல்ல, கொடுங்காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனத்தை பொருத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக வேலை பார்த்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள சம்பள பட்டியலில் 23,570/- ரூபாய் பெறுவதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு விபத்தின் காரணமாக சம்பளமானது தடையில்லாமல் வந்தது என்று சொன்னால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. என்னுடைய வயதை காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர தேவையில்லை என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி